Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
DHINATH DHALAM Tamil & English daily Paper
ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 119 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 01.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

# மக்கள் விரும்பும் ஆட்சியாக தி.மு.க. அரசு இருக்கிறது

## கிராம கோயில் பூசாரிகள் மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை, மயிலாப்பூர், ஆர்.கே. மடம் சாலை, கபாலீசுவரர் திடலில் சனிக்கிழமை நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது, உங்களையெல்லாம் ஒருசேர பார்க்கும்போது, மனதில் பெரு மகிழ்ச்சி பெருக்கெடுக்கின்றது. நம்முடைய திராவிட மாடல் ஆட்சிப்பற்றி நாம் சொல்வது எல்லாருக்கும் எல்லாம் அதற்கு எடுத்துக்காட்டுதான் இந்த விழா! "எல்லாருக்கும் எல்லாம்" என்று நாம் சொல்வது, வாய் வார்த்தைக்காக அல்ல; சொற்களில் சொல்வதை, செயலில் நிரூபிக்கிறோம் என்பதற்கான அடையாளம்தான் இந்த மாநாடு!

உண்மையான ஆன்மீக அன்பர்களும், இறை பற்றாளர்களும் விரும்பக்கூடிய அரசுதான், திராவிட மாடல் அரசு! இந்தமாநாட்டைப்பார்க்கும்போது, பலருக்கு வியப்பாக இருக்கலாம்; ஏன், சிலருக்கு எரிச்சல்கூட வரலாம். கிராம கோயில்களில் பணியாற்றுகின்ற கிராமப் பூசாரிகளான நீங்களும் இந்த சமுதாயத்தில் ஒரு அங்கம்தான். உங்களுடைய வாழ்விலும், விடியல் ஏற்படவேண்டும் என்றஎண்ணத்தில்தான், நம்முடைய அரசு தொடர்ந்து செயலாற்றி வருகிறது. இன்னும் சொல்லப்போனால், இந்த மண்ணில் வாழுகின்ற பெரும்பான்மையான மக்களுடைய உரிமைகளை நிலைநிறுத்திய திராவிட இயக்கத்தின் உணர்வை, நம்முடைய அரசில்தான் நிலைநாட்டியிருக்கிறோம். ஒருகாலத்தில், கோயில் இருக்கின்ற தெருக்களில் கூட பலரால் நுழைய முடியாத நிலைதான் இருந்தது; அதை மாற்றி, இன்றைக்கு கோயில்களுக்குள்ளே அனைத்து மக்களும் வரலாம்; அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம்; அன்னைத் தமிழில் அர்ச்சனை செய்யலாம் என்று மாற்றியிருக்கிறோம். இந்த மாற்றம்தான், நாம் விரும்புகின்ற சமூக முன்னேற்றம்! இதைத்தான் உண்மையான இறைப் பற்றாளர்களும் விரும்புவார்கள். இறை நம்பிக்கையை பொறுத்தவரைக்கும், திமுகவின் நிலைப்பாடு என்பது, "ஒன்றே குலம் ஒருவனேதேவன்" என்று திருமூலர்சொன்னவழிதான் என்று பேரறிஞர் அண்ணா சொல்லியிருக்கிறார்.,அனைவருக்கும் மதிப்பளிக்கும், அனைவரது மாண்பையும் காக்கும், அனைவரது உரிமைகளையும் பாதுகாக்கும் துறையாக, நம்முடைய அறநிலையத்துறை செயல்பட்டு வருகிறது.

பூசாரிகளின் நலனுக்கான 11 புதிய அறிவிப்புகளை வெளியிட விரும்புறேன்

முதலாவது அறிவிப்பு – ஒவ்வொரு ஆண்டும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளுக்கு அனைத்து உறுப்பினர்களுக்கும் புத்தாடை வழங்கப்படும்.

உறுப்பினர் மரணம் அடைந்தால், அவருடைய வாரிசுதாரர்களுக்கு தற்போது வழங்கப்படும் தொகை ரூ.50 ஆயிரத்தில் இருந்து ஒரு லட்சமாக யாக உயர்த்தப்படும்.

கிராம கோயில் பூசாரிகளுக்கு நிர்ணயிக்க ப்பட்ட ஆண்டு வருமான உச்சவரம்பு 72 ஆயிரத்தில் இருந்து ரூ.1 லட்சமாக ஏற்கனவே உயர்த்தப்பட்டுள்ளது! தற்போது உங்களுடைய கோரிக்கையை ஏற்று ஆண்டுக்கு ரூ.1 லட்சத்து 25 ஆயிரமாக உயர்த்தப்படும். இயற்கை எய்திய உறுப்பினரின் ஈமச்சடங்குக்காக தற்போது வழங்கப்படும் தொகை ரூ.5 ஆயிரத்தில் இருந்து ரூ.10 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.

அருகாமையில் இருக்கின்ற பெரிய திருக்கோயில்கள் மூலம் ஆண்டுதோறும் 500 பூசாரிகளுக்கு, தேர்ந்த பயிற்றுநர்களை கொண்டு புத்தொளிப் பயிற்சி நடத்தப்படும்.

தற்போது பூசாரிக்கு 3 ஆயிரம், பூசாரிகளின் மகனுக்கு 3 ஆயிரம், மகளுக்கு 5 ஆயிரம் என திருமணத்துக்கு வழங்கப்படும் நிதி உதவி, மேலும் ஆயிரம் ரூபாய் உயர்த்தப்படும்.

பூசாரிகளின் மகன், மகளுக்கு தற்போது வழங்கப்படும் பள்ளிக்கல்வி நிதி உதவி, மேலும் ரூ.ஆயிரம் உயர்த்தப்பட்டு, 2 ஆயிரம் மற்றும் 2 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

பூசாரிகளின் மகன், மகளுக்கு தற்போது ஒவ்வொரு கல்வி ஆண்டும் வழங்கப்படும் இளநிலை, முதுநிலை பட்டப்படிப்பு நிதி உதவி ஆண்டுக்கு மேலும் ரூ.2 ஆயிரம் உயர்த்தப்படும்.

பூசாரிகளின் மகன், மகளுக்கு தற்போது ஒவ்வொரு கல்வி ஆண்டும் வழங்கப்படும் தொழில் சார்ந்த இளநிலை, முதுநிலை பட்டப்படிப்பு நிதி உதவி, ஆண்டுக்கு மேலும் ரூ.2 ஆயிரம் உயர்த்தப்படும்.

## ஒரே நாளில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.5,200 உயர்ந்து



ஒரே நாளில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.5,200 உயர்ந்து ஒரு சவரன் ரூ. 1,24,400க்கு விற்பனை செய்யப்படுகிறது.

காலையில்சவரனுக்கு ரூ.2,400 உயர்ந்த நிலையில் தற்போது ரூ.2,800 உயர்ந்துள்ளது. ஆபரணத் தங்கத்தின் விலை காலையில் கிராமுக்கு ரூ.300 உயர்ந்தது; தற்போது மேலும் ரூ.350 அதிகரித்துள்ளது. சென்னையில் வெள்ளி விலை கிராமுக்கு ரூ.20 உயர்ந்து ஒரு கிராம் ரூ.320க்கு விற்பனை செய்யப்படுகிறது

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில்**
**இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt






தினத்தளம் தினசரி காலை நாளிதழ் 01.03.2026



கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள செல்லும் வழியில், நிர்மலா மகளிர் கல்லூரியின் மாணவியர்கள் தமிழ்நாடு அரசின் உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மடிக்கணினிகளுடன், அரசு செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்களுக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் (27.2.2026) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு, அனுப்பர்பாளையம் கிராமத்தில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையக் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு வைக்கப்பட்டுள்ள புத்தகங்களையும் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. ஈஸ்வரசாமி, திரு.கே.இ.பிரகாஷ், முன்னாள் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி. செந்தில்பாலாஜி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி. ரங்கநாயகி, துணை மேயர் திரு. இரா. வெற்றிசெல்வன், பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ.) திருமதி ச.ஜெயந்தி, இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பவன்குமார் க. கிரியப்பனவர், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையர் திரு.மா. சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்

# ஒழுக்கமே வாழ்வில் உயர்வு தரும் மாணவர்களுக்கு அறிவுரை

தேவகோட்டை - சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. ஆசிரியர் ஸ்ரீதர் வரவேற்றார். தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். தேவகோட்டை எஸ்.எம். ஏஆர். அறக்கட்டளை நிர்வாகி அருணாச்சலம் முன்னிலை வகித்தார். அறக்கட்டளை நிர்வாகி சுவாமிநாதன் பேசுகையில், கல்வியோடு சிறந்த ஒழுக்கத்தையும் கற்றுக்கொள்ள வேண்டும். கண்முன் கஷ்டப்படுபவர்களுக்கு உதவ வேண்டும்.படித்த பள்ளியை என்றுமே மறக்கக்கூடாது .என்று பேசினார். போட்டிகளில் சிறப்பாக பங்கேற்ற மாணவர்கள் லேகா ஸ்ரீ, நந்தனா, ரித்திகா,யோகின் ,அஜய் ஆகியோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டது . நிறைவாக ஆசிரியை வள்ளிமயில் நன்றி கூறினார்.






தமிழ்நாடும் நமதே !என்ற தலைப்பில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் சில்வார்பட்டி எருமநாயக்கன்பட்டி பகுதிகளில் நடைபெற்றது பெரியகுளம் கிழக்கு ஒன்றிய தலைவர் முத்தையா தலைமை வைத்தார்,விளையாட்டு மேம்பாட்டு மாநில பொறுப்பாளர் குமரகுரு, தேனி மாவட்ட இளைஞரணி பொதுச் செயலாளர் ஆட்டோ முனியாண்டி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் முருகன், கிழக்கு ஒன்றிய பொதுச் செயலாளர் பாண்டி, ஒன்றிய விவசாய அணி மூர்த்தி, ராணுவ பிரிவு மாவட்ட செயலாளர் ராஜபாண்டி, அபிமன்னன் ராஜாங்கம் சின்னவர் சென்ராயன் மகேந்திரன் கருப்பையா குருசாமி நாட்டாமைமற்றும்அதிமுகஅமமுமுகமற்றும்இதரகூட்டணிகள்,பொதுமக்கள்ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மற்றும் இந்நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்த ஊராட்சி பொறுப்பாளர்B.செல்வராஜ், மனோகரன்சக்தி கேந்திராபாரதியஜனதாகட்சியின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள செல்லும் வழியில், நிர்மலா மகளிர் கல்லூரியின் மாணவியர்கள் தமிழ்நாடு அரசின் உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மடிக்கணினிகளுடன், அரசு செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்களுக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்

### அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் வரலாற்று துறையில்

# நானும் ஒரு டாட்டா என்ற தலைப்பில் தொழில் முனைவோர் பயிலரங்கம் நடைபெற்றது

அழகப்பாஅரசு கலைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தியின் வழிகாட்டுதலின்படி யாளர் குமரகுரு, மற்றும் சிவப்பிரகாஷ், மாரீஸ்வரன் ஆகியோர் கருத்தாளர்களாகக் கலந்து இணைப்பேராசிரியர் வேலாயுதராஜா நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் பேராசிரியர்கள்



நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வரலாற்றுத் துறை தலைவர் முனைவர் நிலோபர்பேகம் வரவேற்புரை ஆற்றினார்.

மதுரை நிகில் பவுண்டேஷன் அமைப்பைச் சேர்ந்த பயிற்சியாளர்களான தலைமை பயிற்சி- கொண்டு தொழில் முனைவோருக்கான தகுதிகள் மற்றும் பண்புகள் குறித்தும்,தொழில் முனைவோருக்கு இருக்கும் அரசு கடன் உதவிகள் குறித்தும் எடுத்துக் கூறி பயிற்சி அளித்தனர். வரலாற்று துறை முனைவர் மார்ட்டின் ஜெயப்பிரகாஷ், முனைவர் குணசேகரன், சரவணன், கௌரவ விரிவுரையாளர்கள் முனைவர் கிளி மொழி, முனைவர் தங்கராஜ் மற்றும் மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

# கள்ளச்சாராயம் காய்ச்ச தளவாட பொருட்களுடன் ஒருவர் கைது



இரணியல் லில் அமைந்துள்ள தக்கலை மதுவிலக்கு பிரிவு போலீசாருக்கு பேச்சிப்பாறை அருகே மணலோடை கிள்ளிக்கோணம் பகுதியில் சாராயம் காய்ச்சுவதாக ரகசிய தகவல்கிடைத்தது.அதன் பேரில் நேற்று போலீஸ் இன்ஸ்பெக்டர் கமலி (பொ),சப்.இன்ஸ்பெக்டர் கருணாகரன் உள்ளிட்ட மதுவிலக்கு போலீசார் ம ண லோ டை கிள்ளிக்கோணம் பகுதியில் தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது அங்கு சந்தேகத்திற்கு இடமாக நின்றிருந்த ஒருவரை பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர் முன்னுக்கு பின் முரணாக பேசினார். தொடர்ந்து நடந்த விசாரணையில் அவர் கிள்ளிக்கோணம் பகுதியை சேர்ந்ததங்கப்பன் மகன் சதீஷ்(43)என்பதும், அவர் அப்பகுதியில் உள்ள மலையில் சாராயம் காய்ச்சுவதும் தெரியவந்தது. இதையடுத்து அவர் வைத்திருந்த 10 லிட்டர் சாராய ஊறல், பானை,ரப்பர் டியூப்புகள், குடம், கப், மரப்பலகை ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். பின்னர் அவரை நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். கள்ளச்சாராயம் காய்க்கும் தளவாட பொருட்களுடன் ஒருவர் கைது . இரணியல் லில் அமைந்துள்ள தக்கலை மதுவிலக்கு பிரிவு போலீசாருக்கு பேச்சிப்பாறை அருகே ம ண லோ டை கிள்ளிக்கோணம் பகுதியில் சாராயம் காய்ச்சுவதாக ரகசிய தகவல் கிடைத்தது.அதன் பேரில் நேற்று போலீஸ் இன்ஸ்பெக்டர் கமலி (பொ), சப். இன்ஸ்பெக்டர் கருணாகரன் உள்ளிட்ட மதுவிலக்கு போலீசார் மணலோடை கிள்ளிக்கோ ணம் பகுதியில் தேடுதல் வேட்டை நடத்தினர்.

அப்போது அங்கு சந்தேகத்திற்கு இடமாக நின்றிருந்த ஒருவரை பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணை யில் அவர் முன்னுக்கு பின் முரணாக பேசினார். தொடர்ந்து நடந்த விசாரணையில் அவர் கிள்ளிக்கோணம் பகுதியை சேர்ந்த தங்கப்பன் மகன் சதீஷ் (43) என்பதும், அவர் அப்பகுதியில் உள்ள மலையில் சாராயம் காய்ச்சுவதும் தெரியவந்தது. இதையடுத்து அவர் வைத்திருந்த 10 லிட்டர் சாராய ஊறல், பானை,ரப்பர் டியூப்புகள், குடம், கப், மரப்பலகை ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். பின்னர் அவரை நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பெருந்துறை சட்டமன்ற தொகுதி மாவட்டச் செயலாளர் வி.விஜயபாலன், மாவட்டத் துணைச் செயலாளர் மு.கிருஷ்ணமூர்த்தி அவர்களை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பின் போது, வரவிருக்கும் தேர்தலுக்கான பிஎல்ஏ 2 பூத் ஏஜெண்டுகளை நியமிப்பது குறித்து விரிவான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மேலும், ஊத்துக்குளி ஒன்றியத்தை கட்சியின் அசைக்க முடியாத கோட்டையாக மாற்ற வேண்டும் என இச்சந்திப்பில் உறுதிபடத் தீர்மானீங்கப்பட்டது.

# என்.ஜி.ஜி.ஓ. காலனி ஸ்ரீ ஐயப்பன் கோவிலில் அஷ்டபந்தன கும்பாபிஷேகப் பெருவிழா



கோவை துடியலூர் அருகே அசோகபுரம் என் ஜி ஜி ஓ காலனி கிருஷ்ணமூர்த்தி 1 வது வீதியில் அமைந்துள்ளது ஸ்ரீ ஐயப்பன் திருகோவில். இக்கோவில் 12 ஆண்டுகளுக்கு பிறகு புணரமைக்கப்பட்டு ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் விமர்சையாக நடைபெற்றது.

நான்காம் கால வேள்வி நடைபெற்று புனித நீர் கலசங்கள் கோவிலைச் சுற்றி ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு முதலில் மூலவர் ஐயப்பனுக்கு புனித நீர் பூஜைகள்செய்யப்பட்டது.அதைத்தொடர்ந்துகோவில் கோபுர கலசங்கள் மற்றும் கோவிலில் அமைந்துள்ள பரிவார தெய்வங்களுக்கும் புனித நீர் ஊற்றப்பட்டு ஜீர்ணோத்தாரணஅஷ்டபந்தனமஹாகும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுற்று வட்டாரங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து அனைவருக்கும் மகா அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்காக ஏற்பாடுகளை ஸ்ரீ ஐயப்பன் திருக்கோவில் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் செய்திருந்தனர்.

# ஈரோடு பவானியில் வீடு வீடாகச் சென்று தமிழக அரசின் சாதனைப் பரப்புரை



ஈரோடு மத்திய மாவட்ட திமுக பொறுப்பாளர் என். டி. தோப்பு வெங்கடாசலம் ஆலோசனையின்படி, பவானி நகரம் தெற்குப் பகுதியில் தமிழக அரசின் சாதனைகளை விளக்கும் தீவிரப் பரப்புரை நடைபெற்றது.

பவானி தெற்குப் பகுதிக்கு உட்பட்ட பூத் எண்கள் 194, 195, 196, 202 மற்றும் 203 ஆகிய வார்டுகளில், தமிழக முதலமைச்சரின் சிறப்பான ஆட்சியில் மக்கள் பெற்று வரும் நன்மைகள் மற்றும் திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் நேரடியாக எடுத்துரைக்கப்பட்டது.

மாவட்ட வர்த்தக அணித் தலைவரும், பூத் ஒருங்கிணைப்பாளருமான ந. தவமணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், 'வெல்லும் தமிழ் பெண்கள்' குழுவினர் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

இந்தப் பெண்கள் குழுவினர் வீடு வீடாகச் சென்று, இல்லத்தரசிகளிடம் தமிழக அரசின் மகளிருக்கான திட்டங்கள் மற்றும் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்து பரப்புரை செய்தனர். குறிப்பாக,முதல்வரின்தொலைநோக்குப்பார்வையில் செயல்படுத்தப்படும்மக்கள்நலப்பணிகள்அடித்தட்டு மக்கள் வரை சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் இந்தப் பிரச்சாரம் அமைந்தது.இதில் திமுக நிர்வாகிகள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் கழகத்தொண்டர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

### ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி

### கோரம்பள்ளம் பகுதியில் ரூ. 20.48 கோடி மதிப்பீட்டில்

# கண்மாயில் தூர்வாரி தடுப்புச்சுவர் கட்டும் பணிகளை சண்முகையா எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்



தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோரம்பள்ளம் குளம் 20.48கோடி மதிப்பீல் கோரம்பள்ளம் கண்மாயில் தூர்வாரி தடுப்புச்சுவர் கட்டும் பணிகளை பூஜையுடன் சண்முகையா எம்.எல்.ஏ தொடங்கி வைத்து பேசுகையில்: தமிழக முதலமைச்சா் மு.க.ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க விவசாயிகளின் நலன் கருதி 20 கோடிமதிப்பீல்தூா்வாரும்பணிகள்துவங்கஉள்ளது அதிகஅளவில்தண்ணீர்தேக்கிவைத்துவிவசாயிகள் பாசனத்தின் பயன்பாட்டிற்கு நன்மை கிடைக்கும் தளபதியார் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் எல்லா பணிகளும் மக்களுக்கான பணிகளாக நடைபெற்று வருகிறது. இதை நல்லமுறையில் அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். என்று பேசினார்.

நிகழ்ச்சியில் செயற்பொறியாளர் தங்கராஜன், உதவி செயற்பொறியாளர் சிவராஜன், ஒன்றிய செயலாளர் ஜெயக்கொடி, பகுதி செயலாளர் ஆஸ்கர், தெற்கு மாவட்ட மகளிர் சமூக வலைதள பொறுப்பாளரும் வெல்லும் தமிழ்பெண்கள் ஸ்டாலின் படை ஓட்டப்பிடாரம் தொகுதி பொறுப்பாளருமான மீனாட்சி,மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் சைமன், தகவல் தொழில்நுட்ப அணி மணிகண்டன், விவசாய அணி துணை அமைப்பாளர் அரிகிருஷ்ணன் கோபால், கலை இலக்கிய அணி தலைவர் பொன்னரசு, பொறியாளர் அணி அமைப்பளார் ஆனந்த், கிளைச்செயலாளர் பெருமாள், மற்றும் கப்பிக்குளம் பாபு, உள்பட அரசு துறை அலுவலர்கள் விவசாயிகள் கலந்து கொண்டனர்..



தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் (27.2.2026) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு, அனுப்பர்பாளையம் கிராமத்தில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையக் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு அமைக்கப்பட்டுள்ள அறிவியல் மையத்தையும் பார்வையிட்டார்.இந்நிகழ்வின்போது, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. ஈஸ்வரசாமி, திரு. கே.இ.பிரகாஷ், முன்னாள் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி. செந்தில்பாலாஜி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி. ரங்கநாயகி, துணை மேயர் திரு. இரா. வெற்றிசெல்வன், பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ.) திருமதி ச.ஜெயந்தி, இ.ஆ.ப.,கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பவன்குமார் க. கிரியப்பனவர், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையர் திரு.மா. சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்



தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் (27.2.2026) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு, அனுப்பர்பாளையம் கிராமத்தில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையக் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, அம்மையத்தின் மாதிரி வடிவமைப்பினையும் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. ஈஸ்வரசாமி, திரு. கே.இ.பிரகாஷ், முன்னாள் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி. செந்தில்பாலாஜி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி. ரங்கநாயகி, துணை மேயர் திரு. இரா. வெற்றிசெல்வன், பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ.) திருமதி ச.ஜெயந்தி, இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பவன்குமார் க. கிரியப்பனவர், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையர் திரு.மா. சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (27.02.2026) அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் திருமணநிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு திருமண நிதியுதவி மற்றும் தங்க நாணயங்களை வழங்கினார்.

## அழகப்பா அரசு கலைக்கல்லூரி சார்பாக யூத் ரெட் கிராஸ், போதை ஒழிப்பு விழிப்புணர்வு



அழகப்பாஅரசு கலைக் கல்லூரி சார்பாக யூத் ரெட் கிராஸ்,போதை ஒழிப்பு விழிப்புணர்வு குழு, நேஷனல் டாஸ்க் போர்ஸ் மற்றும் மனநல விழிப்புணர்வுக்குழு இணைந்து ஒரு நாள் புத்தாக்க பயிற்சி மற்றும் இலவசமருத்துவமுகாம் நடைபெற்றது. இவ்விழாவிற்கு நேஷனல் டாஸ்க் போர்ஸ் ஒருங்கிணைப்பாளர் தாவரவியல் துறை உதவிப் பேராசிரியர் பழனிச்சாமி

வரவேற்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் வசந்தி தலைமை உரை வழங்கினார். மேலும் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி சிவகங்கை மாவட்டத் தலைவர் சுந்தரராமன் , இளஞ்செஞ்சிலுவைச் சங்கத்தின் மண்டலப் பொறுப்பாளர் முனைவர் கணேசமூர்த்தி , மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஃபரீதா பேகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.போதை ஒழிப்பு விழிப்புணர்வு குழுவின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சரவணன் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட குளோபல் மிஷன் மருத்துவமனையின் உரிமையாளர் மருத்துவர் குமரேசன் மாணவர்களுக்கு போதைப் பொருளால் ஏற்படக்கூடிய தீங்குகளையும் மற்றும் மாணவர்களுக்கு மன தைரியத்தையும் மற்றும் மன நலனை பாதுகாத்தலையும் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். யூத் ரெட் கிராஸ் ஒருங்கிணைப்பாளர் முனைவர் பாரதி ராணி நன்றி கூறினார். அதனைத்தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக்கான சிறப்பு முகாமில் ஃபெமி9 ன் ஆலோசகர் ராஜலெட்சுமி இயற்கை முறை நாப்கின் பயன்பாடு குறித்து விளக்கினார். மேலும்

குளோபல் மருத்துவமனை , பிரபு டென்டல் மருத்துவமனை, கானல் கண் மருத்துவமனை IRCS மருத்துவக் குழுக்களின் மூலம் இலவச பரிசோதனைகள் நடத்தப்பட்டன. ஆசிரியர்கள் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் மாணவர்கள் என 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## கோவையில் தொடர்ந்து 42 ஆண்டுகாலம் மக்கள் சேவையாற்றும், எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் 42வது நிறுவனர் நாள் விழா

கோவை எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் 42-வது நிறுவனர் நாள் விழா, வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. எஸ்.என்.ஆர்.சன்ஸ் அறக்கட்டளை கடந்த 1970-ம் ஆண்டு, மறைந்த எஸ்.என். ரங்கசாமி நாயுடுவால் தோற்றுவிக்கப்பட்டது. இந்த அறக்கட்டளையின் கீழ் மருத்துவம்,கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட 18 நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றது. இதன் நிறுவனர் நாள் விழா ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.




இதன்படி 42-வது ஆண்டு நிறுவனர் நாள் விழா, கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள,ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர்டாக்டர்சுந்தர் ராமகிருஷ்ணன் தலைமை வகித்து, வரவேற்புரை வழங்கினார். அதைத் தொடர்ந்து, எஸ். என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் கீழ் செயல்படும் கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள் ஆண்டறிக்கை வாசித்தனர். விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக லேப்ஸ், ஏ. வி.எம்.ஸ்மைல்ஸ் மற்றும் தைரோகேர் ஆகிய நிறுவனங்களின் நிறுவனர் டாக்டர் ஏ. வேலுமணி கலந்துகொண்டு,ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை மற்றும் கல்வி நிறுவனங்களில் மருத்துவர்கள், பேராசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் பிற பணியாளர்கள் என்று 25 ஆண்டுகள் நிறைவு செய்த 30 நபர்களைக் கௌரவித்து அவர்களுக்கு விருதுகள் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து, 400-க்கும் மேற்பட்ட இருதய வால்வு மாற்று அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ள டாக்டர் எஸ்.தியாகராஜமூர்த்தி அவர்களைக் கௌரவிக்கும் வகையில் அவருக்கு சிறப்பு விருதினை யும் வழங்கிச் சிறப்பித்தார் இந்தவிழாவில் எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை இணை நிர்வாக அறங்காவலர் நரேந்திரன் சௌந்தரராஜ், அறங்காவலர்கள் ராமகிருஷ்ணா விஜயகுமார், லஷ்மிநாராயணஸ்வாமி துரைசாமி, தலைமை செயல் அதிகாரி சி.வி.ராம்குமார், தலைமை நிர்வாக அதிகாரி டி.மகேஷ் குமார். ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல். சிவக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வென்றிலிங்கபுரம் கிராமத்தில் பள்ளி கட்டிடம் திறப்பு

தென்காசி மாவட்டம் மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியம் பட்டாடை கட்டி ஊராட்சியில் வென்றிலிங்கபுரம் கிராமத்தில் நபார்டு திட்டத்தின் மூலம் அரசு உயர்நிலைப் பள்ளியின் இரண்டு அடுக்கு மாடி பள்ளி கட்டிடம் ரூபாய் 76 லட்சத்தில் பணி முடிக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு ஊராட்சி மன்ற தலைவர் சுமதி கனகவேல் தலைமை வகித்தார். பள்ளி தலைமையாசிரியர் சந்தனகுமார், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வடகாசி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பள்ளி கட்டிடத்தைதிறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் பேசுகையில் இந்த வட்டாரத்தில் கடந்த 10 ஆண்டுகளாக 100% மாணவர்கள் பத்தாம்வகுப்பில்தேர்ச்சி பெற்று பெருமை சேர்த்தமைக்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கிறேன். இப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று திமுக அரசு கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் 35 வீடுகள் கட்டப்பட்டுள்ளது. மேலும் புதிதாக எட்டு வீடுகளுக்கு அனுமதி அளித்துள்ளது. இவ்வாறு ராஜா எம்எல்ஏ பேசினார். இதனைத் தொடர்ந்து சென்னையில் நடைபெற்ற தோள் கூத்துநாடகத்தில்மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், பள்ளி மாணவர்களை உற்சாகப்படுத்தியபள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கு ராஜா எம்எல்ஏ வாழ்த்து தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து 15லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சிமெண்ட் சாலையை எம்எல்ஏ ராஜா துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஒன்றிய பொறுப்பாளர் ராஜதுரை, துணைச் செயலாளர் செல்லத்துரை, கிளைச் செயலாளர் கனகராஜ், பேச்சாளர் நவமணி, பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் மணிமுத்து, பாண்டி, பள்ளி மேலாண்மை குழு தலைவர் ஸ்வேதா, வார்டு உறுப்பினர்கள் பரதன், முருகேஸ்வரி, கணேசன்,பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், திரளான பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஊராட்சி மன்ற செயலாளர் யோகநாதன் நன்றி கூறினார்.



## தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் தேர்தல்

### மதுராந்தகம் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களை சந்தித்து ஆதரவு திரட்டினார் இந்துமதி உதயகுமார்



செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் நீதிமன்றத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் தேர்தல் 2026-தேர்தலில் போட்டியிடும் அச்சிறுப்பாக்கம் ஊராட்சிஒன்றியம்மாத்தூர் ஊராட்சியை சார்ந்த வழக்கறிஞர் இந்துமதி உதயகுமார் இவர்கள் மதுராந்தகம் நீதிமன்றத்தில் தான் வெற்றி பெற வழக்கறிஞர்கள் சங்கத்தலைவர், செயலாளர், துணை தலைவர், பொருளாளர் உட்பட அனைத்து வழக்கறிஞர்களை சந்தித்து ஆதரவு திரட்டி வாக்குகள் அளிக்குமாறு கேட்டுக்கொண்டார் முன்னதாக மதுராந்தகம் வழக்கறிஞர் சங்கத்தின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் இந்துமதி உதயகுமார் அவர்களுக்கு ஆடை போர்த்தி பட்டாசு வெடித்து வரவேற்பு அளித்தனர்

வழக்கறிஞர்கள் திரளானோர் கலந்து கொண்டனர்

### உளுந்தூர்பேட்டை புறவழி சாலை பகுதியில்

## இருசக்கர வாகனத்தில் கடத்திவரப்பட்ட 10 கிலோ கஞ்சா பறிமுதல்


### வாலிபர் கைது, வாகனங்கள் பறிமுதல்



ஆந்திராமாநிலத்தில்இருந்துதமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு கஞ்சா பொட்டலங்கள் பல்வேறு வாகனங்களில் கடத்து செல்லப்பட்டு வருவதாக போலீசாருக்கு தகவல் பரவியது எதை எடுத்துஇன்றுவெள்ளிக்கிழமைஅதிகாலை உளுந்தூர்பேட்டை காவல் ஆய்வாளர் சிவப்பிரகாசம்தலைமைஉளுந்தூர்பேட்டை சாலையில் உள்ள விருத்தாசலம் சாலை மேம்பாலம் பகுதியில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்பொழுதுசென்னையில்இருந்துசேலம் மார்க்கமாக சென்ற இருசக்கர வாகனத்தை போலீசார் பரிசோதனை செய்த நிலையில் அந்த இருசக்கர வாகனத்தில் 10 கிலோ கஞ்சா பொட்டலங்கள் இருந்தது தெரிய வந்தது மேலும் அந்த இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் சென்னை திருவள்ளூர் பகுதியைச் சேர்ந்த கூலிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த வெங்கடேஷ் என்ற 21 வயது இளைஞர் என்பதும்தெரிய வந்தது எதை எடுத்து அந்த இளைஞரை கைது செய்த போலீசார் அவரிடம் தீவிர விசாரணை மீட் பண்றார் அப்பொழுது அவருடைய நெருங்கிய நண்பரான ஆகாஷ் என்பவர் ஆந்திர மாநிலத்திற்கு சென்று மூட்டை மூட்டையாக கஞ்சா பொருட்களை வாங்கி வந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு வெங்கடேஷ் மூலமாக அனுப்பி வைத்து வந்ததும் தெரிய வந்தது இதையடுத்து வெங்கடேச கைது செய்த போலீசார் அவர் மீது போதைப்பொருள் தடுப்புசட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்ததோடு அவரை கைது செய்தனர் மேலும் ஆகாஷ் மீதும் அதே சட்டத்தில் வழக்கு பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## போக்சோவில் முதியவர் கைது



கன்னியாகுமாரி மாவட்டம் நாகர்கோவில் நீதிமன்றம் தீர்ப்பு-செண்பகராமன் புதூர் பகுதியை சேர்ந்தவர் சாமிதாஸ் (63). இவர் மனநலம் பாதிக்கப்பட்ட 16 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததில் சிறுமி கர்ப்பமானார், சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் நாகர்கோவில் மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். வழக்கை விசாரித்த நாகர்கோவில் போக்சோ நீதிமன்ற நீதிபதி சுந்தரய்யா குற்றம் சாட்டப்பட்ட சாமிதாசுக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நேற்று தீர்ப்பு வழங்கினார்.



தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், ஈரோடு மாவட்டத் தொகுதிகளில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. குறிப்பாக, ஈரோடு மேற்கு, கிழக்கு, பவானி, அந்தியூர், பெருந்துறை ஆகிய தொகுதிகளில் திமுகவின் வேட்பாளர் தேர்வு விறுவிறுப்படைந்துள்ளது. மக்களிடம் நற்பெயரும், செல்வாக்கும் மிக்க திமுக மாநில விவசாய அணி இணைச் செயலாளர் குறிஞ்சி என்.சிவகுமார், போட்டியிட அண்ணா அறிவாலயத்தில் விருப்பமனு அளித்துள்ளார். விவசாயிகளின் குரலாகவும், களப்பணியாளராகவும் திகழும் இவரது முன்னெடுப்பு, கட்சித் தொண்டர்களிடையே மிகுந்த உற்சாகத்தையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

# ஈரோட்டில் திமுக பிரமுகர் இல்ல திருமண வரவேற்பு விழா; அமைச்சர்கள் பங்கேற்பு





ஈரோடுதெற்குமாவட்ட திமுக பொருளாளரும், ஈரோடு மாநகராட்சி ஒன்றாம் மண்டலத் தலைவருமான ப.க.பழனிச்சாமி அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு விழா, ஈரோடு பவானி சாலை அருகே அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் மிக விமர்சையாகவும் கோலாகலமாகவும் நடைபெற்றது. விழாவிற்கு வருகை தந்த தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி தொடர்புத்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் மணமக்களை நேரில் சந்தித்து மலர்க்கொத்து வழங்கி தங்களது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்தனர். இந்த விழாவின்சிறப்பம்சமாக, திருமண மண்டபத்தின் நுழைவு வாயிலில் திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ப.க.பழனிச்சாமி தனது திருமணத்தில் வருகை புரிந்த நிகழ்வுகளின் நிழற்படங்கள் பிரம்மாண்டமாக வைக்கப்பட்டிருந்தன.

மேலும், தமிழக அரசின் சாதனைகளான மகளிர் உரிமைத் தொகைத்திட்டம்,மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து பயணம் உள்ளிட்ட மக்கள் நலத்திட்டங்களை விளக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த கலைநயமிக்க விளம்பர பதாகைகள் காண்போரைக் கவரும் வண்ணம்அமைந்திருந்தன.இவ்விழாவில்திமுக மற்றும் பல்வேறு கட்சிகளின் முக்கிய நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் திரளாகக் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# காவிரி நதியைப் பாதுகாக்கக் கரம் கோர்த்த தன்னார்வலர்கள்

## ஈரோடு கருங்கல்பாளையத்தில் மாபெரும் தூய்மைப்பணி நடைபெற்றது





ஈரோடு: நதிகளின் புனிதத்தைப் பேணிக் காக்கும் வகையில், 'நம்மில் இருந்து துவங்கட்டும் மாற்றம்' என்ற எழுச்சிமிகு முழக்கத்துடன் ஈரோடு கருங்கல்பாளையம் காவிரி கரையில் மாபெரும் தூய்மைப் பணி வெற்றிகரமாக நடைபெற்றது. ஈரோடு காவிரி ஆரத்திக் குழு, ஈரோடு மாநகராட்சி நிர்வாகம், இலஞ்சிசமூகநலஇயக்கம்,பசுஞ்சோலைநண்பர்கள், பள்ளிபாளையம்பசுமைநண்பர்கள்மற்றும்பல்வேறு சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து இந்த நதி சீரமைப்புப் பணியை முன்னெடுத்தனர். கருங்கல்பாளையம் காவிரி கரையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சோழிஸ்வரர் ஆலய படித்துறை மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஆற்றுப் பகுதிகளில் தேங்கியிருந்த பிளாஸ்டிக் கழிவுகள், குப்பைகள் மற்றும் நீர்நிலையை ஆக்கிரமித்திருந்த ஆகாயத்தாமரைகள் அனைத்தும் இந்தப் பணியின் மூலம் முழுமையாக அகற்றப்பட்டன. நதிகளின் தூய்மையே நாட்டின் தூய்மை என்பதை உணர்த்தும் விதமாக நடைபெற்ற இந்த உன்னதப் பணியில், அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள், தன்னார்வலர்கள் மற்றும் சமூக நல அமைப்புகளைச் சார்ந்த நண்பர்கள் எனப் திரளானோர் கலந்துகொண்டு நதி பாதுகாப்புப் பணியில் கரம் கோர்த்தனர். இன்றைய இந்தத் தூய்மைப் பணியின் மூலம்காவிரிஆற்றின்படித்துறைப்பகுதிகள்பொலிவு பெற்றுள்ளதோடு, பொதுமக்களிடையே நதி பாதுகாப்புகுறித்தவிழிப்புணர்வும்ஏற்படுத்தப்பட்டது.



ஹரிகரன்,கண்ணன்,குமார் மற்றும் பல இயக்க நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர் .மேலும் இவ்விழாவில் அரசியல் பிரமுகர்கள் ,தொழிலதிபர்கள்,அரசு அதிகாரிகள், நன்னகரம் ஊர் நாட்டாமைகள்,ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அருள் பெற்று சென்றனர்.





தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், திமுகவில் வேட்பாளர் தேர்வு விறுவிறுப்படைந்துள்ளது. அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்கள் குவியும் சூழலில், ஈரோடு கிழக்கு மற்றும் மேற்கு தொகுதிகள் பெரும் எதிர்பார்ப்பைஏற்படுத்தியுள்ளன.அங்கு,மக்கள்செல்வாக்குமிக்கமண்டலத்தலைவரும், விவசாய அணி மாவட்ட துணை அமைப்பாளருமான காட்டுசுப்பு (எ) மு.ப.சுப்ரமணியம், இரண்டு தொகுதிகளிலும் போட்டியிட விருப்ப மனு அளித்துள்ளார்.



தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, பவானிசாகர் தொகுதிக்குதிமுகசார்பில்போட்டியிட ஈரோடு மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் விஜயகுமார் விருப்பமனு தாக்கல் செய்தார். சென்னை அண்ணா அறிவாலயத்தில் அவர் தனது மனுவை வழங்கினார். மக்களிடையே நற்பெயர் பெற்றுள்ள இவர், கழகப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.





ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (27.02.2026) அன்று ஈரோடு அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில், "பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" வாழ்க்கை கல்வி மற்றும் உயர்கல்வி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேசினார்.

# ஈரோடு நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்

# ஆண்டு விழா மற்றும் கல்லூரிகளுக்கிடையேயான ஹிலாரியோ 26 கலைத்திறன் போட்டிகள்



ஈரோடு நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஆண்டு விழா மற்றும் "ஹிலாரியோ 26" எனும் பல்வேறு கல்லூரிகளுக்கு இடையேயான கலைத்திறன் போட்டிகள் கடந்த இரண்டு நாட்களாக மிகவும் கோலாகலமான முறையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியானது கடந்த 18 ஆண்டுகளாக தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் தலைமையில் நடைபெற்ற இவ்விரு விழாக்களின் துவக்க நிகழ்வினை அறக்கட்டளையின் அங்கத்தினர் .பானுமதி சண்முகன்குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலாகளான எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி,மற்றும் கல்லூரியின் முதல்வர் முனைவர்சு.மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டு முன்னிலை வகித்தார்கள். முன்னதாக கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் ப. கோமதி சுப்பிரமணியம் வரவேற்புரை வழங்கினார். முதல் நாளன்று நடைபெற்ற ஆண்டு விழாவில், பகுப்பாய்வு அடிப்படையில் முதல் 20 இடங்களை தக்க வைத்துக் கொண்ட பேராசிரியர்களுக்கும். பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில்முதல்மூன்று இடங்களைப் பிடித்த மாணவ-மாணவிகளுக்கும் விருதுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் வழங்கி கௌரவப்படுத்தினார்.

குழு நடனம், ஆடை அலங்காரம் போன்ற பலதரப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தக்கூடியபோட்டிகள் நடைபெற்றன.ப்போட்டிகளின் முடிவில்சினிமாதிரைப்பட புகழ் நடிகையும் மற்றும் பாடகியுமான "ஆண்ட்ரியா ஜெர்மியா" சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். விழாவின் முடிவில் உயிர்தொழில்நுட்பவியல் துறைத்தலைவர் முனைவர்.கே. அப்துல் நன்றியுரை வழங்கினார். இரண்டாம் நாளன்று நடைபெற்ற கலைத்திறன் போட்டிகளின் நிகழச்சியில் சிறப்பு விருந்தினர்களாக சூப்பர் சிங்கள் சீசன் 10 வெற்றியாளர் "ஜான் ஜெரோம்" மற்றும் இரண்டாம் இடம் பிடித்த "ஜீவிதா" ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். முன்னதாக கலைப்போட்டிகளின் ஒருங்கிணைப்பாளர் இணைப்பேராசிரியர் முனைவர் எ.மோகன்ராஜ் போட்டியில் கலந்துக் கொண்ட மாணவர்களையும், சிறப்பு விருந்தினர்களையும் வரவேற்று பேசினார்.

இதனை தொடர்ந்து தனிநடனம், மௌனநாடகம்,குழுநடனம்,சமையற்கலைப்போட்டி, தேவையற்ற பொருள்களிலிருந்து உபயோகமான பொருட்கள் தயாரித்தல், மெகந்தி, ரங்கோலி, முகவண்ணப்போட்டி,புகைப்படம், ஆடைஅலங்காரவடிவமைப்பு போன்றபல்வேறு போட்டிகள் மாணவர்களின் தனித்திறன்களை வெளிக்கொணரும் வகையில் நடத்தப்பட்டன.ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களை தக்க வைத்துக் கொண்ட மாணவ கலைஞர்களுக்கு பரிசுகளை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் வழங்கி பாராட்டி தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். இவ்வாறாக அனைத்து போட்டிகளிலும் அதிக அளவில் முதல் மூன்று இடங்களை தக்க வைத்துக் கொண்ட திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் தன்னாட்சி கல்லூரி ஒட்டு மொத்த சாம்பியன் பட்டம்பெற்றுவெற்றிவாகை சூடியது.நிகழ்வின் முடிவில், துணை ஒருங்கிணைப்பாளர் இணைப்பேராசிரியை ப. செல்வி நிகழ்ச்சியில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (27.02.2026) அன்று ஈரோடு மாவட்ட நிர்வாகம், மாவட்ட முன்னோடி வங்கி மற்றும் அனைத்து வங்கிகளும் இணைந்து எல்லீஸ்பேட்டையில் உள்ள பாரதிதாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடத்திய சிறப்பு கல்விக் கடன் மேளாவில் கல்விக்கடனுதவி வேண்டிய விண்ணப்பித்த கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்விகடனுக்கான ஒப்புகை கடிதத்தினை வழங்கினார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.